| D–1095 |
|---|

| Sub. Code |
|---|
| 10711 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

First Semester

இக்கால இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.

1. பாரதியார் குயில் பாட்டை எவ்வூரில் எழுதினார்?

2. பாரதிதாசனுக்குச் சாகித்திய அகாடமி விருது பெற்றுத்தந்த நூல் எது ?

3. மாங்கனியின் காதலன் யார் ?

4. புதுக்கவிதை படைப்பில் தடம்பதித்த இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.

5. "ஊசிகள்" கவிதை நூலின் ஆசிரியர் யார்?

6. உன்னை மிகவும் கவர்ந்த ஹைக்கூ கவிதை ஒன்றினை எழுதுக.

7. தமிழில் தோன்றிய முதல் சிறுகதை எது ? அதன் ஆசிரியர் யார் ?

8. "கல்யாண் ஜீ" என்ற புனைப்பெயர் கொண்ட சிறுகதை ஆசிரியர் ?

9. அம்பை எத்தகைய எழுத்தாளர் ?

10. “அளம்” என்பது எதனைக் குறிக்கும் ?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) குயில் பாட்டு உணர்த்தும் செய்தி யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியின் சிறப்புகளாகப் பாவேந்தர் குறிப்பிடுவனவற்றை விளக்குக.

12. (அ) “மாங்கனி” பாத்திரம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கவிஞர் பிருந்தா சாரதியின் ‘ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கூடம்’ கவிதை உணர்த்தும் செய்திகள் யாவை?

13. (அ) “சூலும் சூலமும்” கவிப்பொருளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கழனியூரனின் ஹைக்கூ கவிதைகள் கூறும் கருத்துக்களை விளக்குக.

14. (அ) ஜெயகாந்தனின் ‘தமிழச்சி’ சிறுகதையின் தலைப்புப் பொருத்தத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) பிரபஞ்சன் – குறிப்பு வரைக.

15. (அ) “ஒரு வீட்டின் மூலையில் சமயலறை” கதை மூலம் அம்பை உணர்த்தும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) காந்தியோடு பேசுவேன் சிறுகதை உணர்த்தும் பொருள் யாது? விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. ‘குயில் பாட்டு’ கூறும் தத்துவக் கருத்துக்களை விவரிக்க.

17. மாங்கனி காப்பிய பாத்திரங்கள் குறித்துக் கட்டுரைக்க.

18. ஹைக்கூ கவிதைகள் வெளிப்படுத்தும் சமூக நிலையை விவரிக்க.

19. ‘பொன்னகரம்’ சிறுகதை வழிப் புதுமைப்பித்தன் உணர்த்தும் செய்தியை விவரிக்க.

20. ‘அளம்’ புதினம் உணர்த்தும் பெண்களின் துயரங்களைக் கட்டுரைக்க.

**D–1096**

| Sub. Code |
|---|
| **10712** |

DISTANCE EDUCATION

B.Litt. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

First Semester

இலக்கணம் – நன்னூல் எழுத்து

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

1. எழுத்து ஆவதென்ன?

2. சுட்டெழுத்து எவை?

3. அளபெடை என்பது யாது?

4. குற்றியலுகரம் என்றால் என்ன?

5. போலி என்பது என்ன?

6. எழுத்துக்கள் எவற்றின் தொழிலால் உச்சரிக்கப்படும்?

7. விகாரம் என்பது யாது?

8. ஞ, ம, ந எப்பொழுது இரட்டிக்கும்?

9. செய்யுள் விகாரங்கள் எவை?

10. "புள்ளும் வள்ளுந் தொழிற்பெயர் மானும்"– கூறுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நூல் என்பது யாது? சான்றுகாட்டி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நூலின் அழகினைச் சான்றுடன் விளக்குக.

12. (அ) உத்தி குறித்து நன்னூலார் வழிநின்று தெளிவுபடுத்துக?

(அல்லது)

(ஆ) ஆசிரியனது வரலாறு குறித்தச் செய்திகளை வகைப்படுத்தியுரைக்க.

13. (அ) சார்பெழுத்துக்களின் வகைகளைச் சான்றுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மாத்திரை என்ன என்பது எழுதி சான்றுடன் தெளிவுபடுத்துக.

14. (அ) போலி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) பகுபதம் குறித்து விளக்கியுரைக்க.

15. (அ) ஐம்பால் விகுதிகள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) இடைநிலை குறித்துத் தெளிவுபடுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. எழுத்துக்களின் பிறப்பிடங்கள் எவை? சான்றுடன் விவாதிக்க.

17. சார்பெழுத்துக்களின் வகைகளைப் பவணந்தியார் வழிநின்று விரிவாக எழுதுக.

18. உயிரீற்றின் முன் வல்லினம் புணர்தலைச் சான்றுடன் ஆராய்ந்துரைக்க.

19. னகர, ணகர வீறு குறித்துத் தக்கச் சான்றுடன் விரிவாக எழுதுக.

20. நுமது கல்லூரியில் நடைபெறும் ஆசிரியர் தின விழாவிற்கு வரவேற்பிதழ் ஒன்றினை எழுதுக.

———————

| D–1097 |
|---|

| Sub. Code |
|---|
| 10713 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

First Semester

தமிழக வரலாறு

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தொல்காப்பியம் குறிப்பிடும் தமிழ்நாட்டின் எல்லையைக் குறிப்பிடுக.

2. மெய்க்கீர்த்தி – சிறு குறிப்பு வரைக.

3. மூவேந்தர்களுக்குரிய அடையாளப் பூக்களை எழுதுக.

4. 'மன்னன் உயிர்த்தே மலர்த்தலையுலகம்' எனக் குறிப்பிடும் இலக்கியம்?

5. திராவிடச் சங்கத்தை நிறுவியவர் யார்?

6. வாதாபிக்கொண்டான் எனச் சிறப்பிக்கப்பெறும் அரசன்?

7. பல்லவர்களின் சின்னம் யாது?

8. பாண்டிய நாடு எப்படையெடுப்பால் சீர்குலைந்தது?

9. தஞ்சை சரஸ்வதி மகாலை நிறுவியவர்?

10. தண்டி யாத்திரை எதன் பொருட்டு நடைபெற்றது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) புறநானூறு பேசும் வேந்தர்களின் கடமைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஐந்திணைப் பகுப்புக் குறித்து விளக்குக.

12. (அ) பல்லவர் செப்பேடுகளின் வகைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களை எடுத்துரைக்க.

13. (அ) சோழர் வரலாற்றில் 'திரும்புறம்பயப்போர்' பெறுமிடத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முற்காலச் சோழர்களின் சிறப்புகளை நும்பாடப் பகுதி வழி நிறுவுக.

14. (அ) பாண்டிய வரலாற்றில் மாலிக்காபூர் போர் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாளையக்காரர்களின் ஆங்கிலேய எதிர்ப்புப் பின்னணியை விளக்கி வரைக.

15. (அ) விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட கவிஞர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஆங்கிலேயர் கல்வி முறையினை விளக்கி வரைக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பழந்தமிழக வரலாற்றை அறிய உதவும் சான்றுகள் குறித்துக் கட்டுரைக்க.

17. களப்பிரர் காலத்தால் விளைந்த நன்மைகளைத் தொகுத்துரைக்க.

18. இராசராச சோழன் தனிச்சிறப்புகளைக் கட்டுரைக்க.

19. மகாத்மா காந்தியின் அகிம்சை வழிப் போராட்டங்களைத் தொகுத்துரைக்க.

20. கப்பலோட்டிய தமிழன் வரலாற்றைச் சான்றுகளுடன் விரித்துரைக்க.

| D–1098 |
|---|

| Sub. Code |
|---|
| 10714 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

First Semester

சிற்றிலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்க.

1. கல்லாடத்தின் நூறு பாடல்களைக் கேட்டுக் தலையசைத்தவர் யார்?

2. பாடல் புனையத் தொடங்கும் மங்கலச் சொற்களுள் இரண்டனை எழுதக.

3. தமிழில் தோன்றிய முதல் கலம்பக நூல் எது?

4. பாணன் பாட்டினை எவற்றோடு தலைவி ஒப்பிட்டுரைத்தாள்?

5. எத்தனை தலைமுறையாகத் திருமாலுக்குத் தொண்டு புரிவதாகப் பெரியாழ்வார் கூறுகிறார்?

6. கண்ணனின் நாவழித்த யசோதை கண்டது யாது?

7. திருமங்கை கண்ணனுக்குத் தந்தவை எவை?

8. காளியைச் சூழ்ந்து இருந்தோர் யாவர்?

9. மங்கை குலோத்துங்கனிடம் எவற்றைத் தூது விடுத்தாள்?

10. பெண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்கள் எவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) கல்லாடத்தின் சிறப்புகளை எழுது.

(அல்லது)

(ஆ) வைகை நதியைக் கல்லாடர் எவ்வாறு போற்றுகிறார்? விளக்குக.

12. (அ) கடுவாய்ப்பறை நந்திப் புகழ் சான்றுதலை விளக்குக.

(அல்லது)

(ஆ) கையறுநிலைத் துறையில் அமைந்த நந்திக் கலம்பகப் பாடலை விளக்குக.

13. (அ) பெரியாழ்வார் திருமாலுக்குப் பல்லாண்டு பாடிய திறத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) கண்ணன் ஆயர்பாடியில் செய்த குறும்புகளை எழுதுக.

14. (அ) கண்ணனுடன் விளையாட வராவிடின் நிலவுக்கு ஏற்படும் துயரங்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) காட்டின் வெம்மையையும் கொடுமையையும் கலிங்கத்துப்பரணி வழி விளக்குக.

15. (அ) உலா காண்போர் குலோத்துங்கனை இராமபிரானுடன் எங்ஙனம் ஒப்பிட்டனர்? விளக்குக.

(அல்லது)

(ஆ) மீனாட்சியின் மழலைத் திருத்தோற்றத்தினைச் செங்கீரைப் பருவத்தின் வழி விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பாங்கி அலரஞ்சித் தலைவியை அச்சுறுத்திய நிகழ்வை விவரிக்க.

17. நந்திவர்மனின் வீரம் கொடை குறித்துக் கட்டுரைக்க.

18. கண்ணனின் திருமேனியழகை ஆய்ச்சியர் கூற்றாகப் பெரியாழ்வார் வருணித்த பாங்கைத் தொகுத்துரைக்க.

19. போரின் கடுமையைக் கலிங்கத்துப்பரணி வழி விவரிக்க.

20. பேரிளம் பெண்ணின் அழகையும் செயல்களையும் கட்டுரைக்க.

---

| D–1099 |
|---|

| Sub. Code |
|---|
| 10721 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Second Semester

அற இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. திருக்குறளின் மூன்று பகுப்புகளை எழுதுக.

2. குலத்தில் பிறந்தார் வாய் சொல் எது?

3. ஆழி எனப்படுவார் யார்? விளக்கம் தருக.

4. சிரித்துப் பழகத் தெரியாதவரை வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

5. நாலடியாருக்கு வழங்கப்படும் பிற பெயர்கள் யாவை?

6. பழமொழியின் உருவம் பற்றி எழுதுக.

7. தமிழ் ஆகமம் என்றழைக்கப்படும் நூல் எது?

8. போலுயிர் மீளப் புக அறியாதே-விளக்குக.

9. நிலையாமை என்ற சொல்லின் பொருள் யாது?

10. ‘பொன்மலர் நாற்றமுடைத்து’ -விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) திருக்குறள் ஓர் வாழ்வியல் நூல் என்பதனை நிருபி.

(அல்லது)

(ஆ) மானம் பற்றியச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

12. (அ) பண்புடைமையின் அவசியத்தைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) அறன் வலியுறுத்தல் நாலடியார் வழி நின்று விளக்குக.

13. (அ) அறிவுடையோர் மேன்மையைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பிரியப்பிரியுமாம் நோய் - பாடல் தரும் கருத்துகளைத் தருக.

14. (அ) கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே - விவரி.

(அல்லது)

(ஆ) அறமே சிறந்த பெருஞ்செல்வம் - பழமொழி நானூறு வழிநின்று விவரி.

15. (அ) திருமந்திரம் குறிப்பிடும் இளமை நிலையாமையை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) கல்லாதார் அடக்கமின்மையை நீதிநெறி விளக்கம் தரும் செய்திகள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களில் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பெருமை அதிகாரம் உணர்த்தும் செய்திகள் யாவை?

17. பிறர் மனை நயவாமை பற்றி நாலடியார் தரும் செய்திகள் யாவை?

18. வாழ்க்கை நெறியை கற்று தரும் திருமந்திரம் பற்றி விவரி.

19. உடலின் நிலையற்ற தன்மையை திருமூலர் குறிப்பிடுவன யாவை?

20. அழியாத செல்வம் கல்வி என்பதனை நீதிநெறி விளக்கத்தின் வாயிலாக வெளிப்படுத்துக.

———————

| D–1100 |
|---|

| Sub. Code |
|---|
| 10722 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Second Semester

இலக்கணம் – நன்னூல் – சொல்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours                                        Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. மூவகை மொழிகள் யாவை?

2. இயல் வழக்கு குறித்து எழுதுக.

3. வேற்றுமை என்றால் என்ன?

4. இயற்சொல்லாவது யாது?

5. வியங்கோல் வினைமுற்று எவ்விடங்களில் வரும்?

6. தொகைமொழிகளை வகைப்படுத்துக.

7. வினையெச்சத்திற்குச் சான்று தருக.

8. உவம உருபு பற்றிக் கூறுக.

9. 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' – விளக்கம் தருக.

10. ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இருதிணை பொதுவினை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) ஐம்பாலினைச் சான்றுடன் எடுத்தரைக்க.

12. (அ) விளி ஏற்கும் பெயர்களைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) உருபு மயக்கம் குறித்து விளக்குக.

13. (அ) வினையெச்ச வாய்ப்பாடுகள் யாவை?

(அல்லது)

(ஆ) வினைச்சொல்லை வகைப்படுத்துக.

14. (அ) வழூக்கள் பற்றி நன்னூலார் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) உயிர்ப்பொருள்களின் பண்பினைக் கூறுக.

15. (அ) சொற்றொடரை எழுதும் முறையில் கவனிக்க வேண்டியவை யாவை?

(அல்லது)

(ஆ) ‘உம்’ இடைச்சொல் குறித்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஆகு பெயரினைச் சான்றுகளுடன் வகைப்படுத்துக.

17. 'வழக்கு' குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

18. பத்து வகை எச்சங்கள் குறித்து கட்டுரைக்க.

19. இடைச்சொற்களைச் சான்றுகளுடன் விவரிக்க.

20. நன்னூலார் குறிப்பிடும் 'நூல்' பற்றிய செய்திகளை எடுத்துரைக்க.

———————

| D–1101 |
|---|

| Sub. Code |
|---|
| 10723 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Second Semester

தமிழ் மொழி வரலாறு

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. திருந்திய திராவிட மொழிகள் யாவை?

2. தமிழ்மொழி வரலாற்றை ஆராய்வதற்குரிய மூல ஆதாரங்களைக் குறிப்பிடுக.

3. மொழியியலார் வழியில் தொல்காப்பியத் தமிழை வகைப்படுத்துக.

4. கலைச்சொல் – குறிப்பு வரைக.

5. சங்கத் தமிழ் ஒலியன் மாற்றத்திற்குச் சான்று தருக.

6. கிளை மொழிகள் என்றால் என்ன?

7. சந்தியக்கரம் – விளக்கம் தருக.

8. தமிழ்மொழியின் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு வித்திட்டவர் யார்?

9. கல்வெட்டின் நோக்கம் யாது?

10. வட்டார வழக்கு என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழின் சிறப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குகைக் கல்வெட்டுக்களின் தனிச்சிறப்பினை எழுதுக.

12. (அ) மராட்டியர்களால் தமிழில் புகுந்த சொற்களைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) உரைநடையில் காணலாகும் பிறமொழிக் கலப்பினை விளக்குக.

13. (அ) மொழிபெயர்ப்பின் பயன்பாட்டினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வானொலித் தமிழ் ஏற்படுத்திய மாற்றம் குறித்து எழுதுக.

14. (அ) கல்வெட்டுக்களை வாசித்து அறியும் முறையினை விளக்குக.

(அல்லது)

(ஆ) இன்றைய பேச்சுத் தமிழ் பற்றி எடுத்துரைக்க.

15. (அ) எழுத்துச் சீர்திருத்தத்தின் நோக்கம் என்ன?

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தொல்காப்பியரின் மொழியியல் அறிவைப் புலப்படுத்துக.

17. தமிழும் அறிவியலும் குறித்துக் கட்டுரைக்க.

18. சோழர் காலத்தில் நிகழ்ந்த தமிழ்மொழி மாற்றங்கள் குறித்து விவரிக்க.

19. தமிழ்மொழி வரி வடிவத்தின் வராற்றினை எடுத்துரைக்க.

20. தமிழ் உரைநடையின் இன்றைய நிலையினை விரிவாக விளக்குக.

---

| D–1102 |
|---|

| Sub. Code |
|---|
| 10724 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Second Semester

திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. திராவிட மொழி ஒப்பியலாய்வின் தந்தை யார்?

2. திருந்தா மொழிகள் இரண்டினைக் கூறுக.

3. திராவிட மொழியோடு இலக்கணத் தொடர்புடைய வேறு மொழி எது?

4. உருபன் என்றால் என்ன?

5. திராவிட மொழிகளில் பெரும்பான்மை இடம்பெறும் இடைநிலை எது?

6. வட திராவிட மொழிகள் எவை?

7. உயிரொலி மாற்றங்களைச் சுட்டுக.

8. மூக்கொலிகள் என்றால் என்ன?

9. அரவம் என்பதன் பொருள் யாது?

10. திராவிட மொழிகள் எவ்வகை மொழி நிலையைச் சார்ந்தவை?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

11. (அ) தென் திராவிட மொழிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நீலகிரி மலைப்பகுதி மொழிகளை எடுத்துரைக்க.

12. (அ) சொல்லாக்கம் பற்றிக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திராவிட மொழிகள் உருபேற்கும் முறையினை எழுதுக.

13. (அ) திராவிட மொழிகளில் பெயரடைகள் எவ்வாறு இடம் பெறுகின்றன?

(அல்லது)

(ஆ) திராவிட மொழி பெயரெச்ச வடிவங்களைக் குறிப்பிடுக.

14. (அ) திராவிட மொழிகளின் வினைமுற்றுக்கள் திணை, பால் உணர்த்தும் முறை யாது?

(அல்லது)

(ஆ) வினையாலனையும் பெயர்கள் குறித்து விளக்குக.

15. (அ) வினைச்சொற்கள் காலங்காட்டும் முறையினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சொற்றொடர் இயைபு பற்றி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. திராவிட மொழி, வடமொழி வேறுபாட்டினைக் கால்டுவெல் எங்ஙனம் ஆராய்கிறார்?

17. திராவிட மொழிகளின் வல்லொலிகள் குறித்து விவரிக்க.

18. திராவிட மொழிகளில் எண்ணுப் பெயர்கள் பற்றிய செய்திகளை விளக்குக.

19. பாலறி கிளவிகள் குறித்து கால்டுவெல் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. திராவிட மொழிகளில் காணப்படும் எச்சங்கள் குறித்து விரிவாக எழுதுக.

---

| D–1103 |
|---|

| Sub. Code |
|---|
| 10731 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Third Semester

சமய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’ எனப் பாடியவர்?

2. ஆண்டாளுக்குப் பெரியாழ்வார் இட்டப்பெயர் யாது?

3. ‘தாண்டக வேந்தர்’ எனப் போற்றப்படும் நாயன்மார்?

4. மாணிக்கவாசகர் திருவார்த்தை என்னும் பதிகத்தை எத்தலத்தில் பாடி அருளினார்?

5. பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற சைவத் திருத்தலங்கள் இரண்டினைச் சுட்டுக.

6. குதம்பைச் சித்தர் – பெயர்க்காரணம் தருக.

7. சோணசைல மாலை பனுவல்களைப் பாடிய அருளாளர்?

8. வள்ளலார் தெய்வமணிமாலையில் எத்தல முருகனைப் போற்றியுள்ளார்?

9. பராபரக்கண்ணி பாடிய இசுலாமியச் சித்தர் யார்?

10. எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை இயற்றிய நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சிவபெருமானின் திருவடிப் பெருமைகளைத் திருமூலர் எடுத்துரைக்குமாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) தோழிகளை ஆண்டாள் துயிலெழுப்பும் தன்மையை விரித்துரைக்க.

12. (அ) உலகியல் அச்சத்தைத் தீர்க்க நாவுக்கரசர் வேண்டுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) அடியார்களின் கூட்டம் குறித்து மாணிக்கவாசகர் உரைக்குமாற்றை எழுதுக.

13. (அ) எண்ணப்பதிகச் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மாங்காய்ப் பால், தேங்காய்ப் பால் என்னும் சொற்களின் தத்துவப் பொருட்களை விவரிக்க.

14. (அ) வள்ளலார் முருகனிடம் வேண்டி நிற்குமாற்றை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சோணசைல மாலை வழி நின்று சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துரைக்க.

15. (அ) குணங்குடி மஸ்தான் சாகிபின் இறைக்காதலைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இரட்சண்ய மனோகத்தின் வழி வேண்டுவனவற்றை எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. மும்மலங்களின் தன்மைகளைத் திருமூலர் தெளிவாக்குமாற்றை விவரிக்க.

17. பாவை நோன்பின் சிறப்புகளை ஆண்டாள் பாடல்களின் வழி எடுத்துரைக்க.

18. இறைவனின் திருவிளையாடல்களைத் திருப்புத்தூர் பதிகத்தின் வழிப் புலப்படுத்துக.

19. குதம்பைச் சித்தரின் பாடல்கள் உணர்த்தும் தத்துவங்களை விளக்குக.

20. இறைவனின் ஆற்றலைப் பராபரக்கண்ணி உரைக்குமாற்றை விரித்துரைக்க.

———————

| D–1104 |
|---|

| Sub. Code |
|---|
| 10732 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Third Semester

இலக்கணம் – அகப்பொருளும் யாப்பும்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. கைக்கிளை – குறிப்பு வரைக.

2. பாலைத்திணைக்குரிய தெய்வமாகக் குறிக்கப்படுவது?

3. எற்படு எத்திணைக்குரிய சிறுபொழுது?

4. கற்பில் நிகழும் பிரிவுகள் எத்தனை வகைப்படும்?

5. எண்வகை திருமண முறைகளில் இரண்டினைச் சுட்டுக.

6. யாப்பருங்கலக்காரிகை எந்த யாப்பினால் ஆனது?

7. தமக்குரிய மாத்திரையில் குறைந்தொலிப்பன எவ்வெவ்வெழுத்துகள்?

8. நிரையசை அமைவது எவ்வாறு? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

9. செய்யுள் உறுப்புகளுள் மூன்றாம் வரிசையில் நிற்கும் உறுப்பு எது?

10. ‘உறங்குவது போலும் சாக்காடு உறங்கி

 விழிப்பது போலும் பிறப்பு’ இக்குறளில் அமைந்திருக்கும் தொடையைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) அன்பின் ஐந்திணைக்குரிய முதற்பொருட்களை விளக்கிடுக.

(அல்லது)

(ஆ) குறியிடங்களும் இடையீடுகளும் பற்றி விளக்குக.

12. (அ) மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வரைவிடை வைத்துப் பொருள்வழிப்பிரிதல் என்பதை விளக்குக.

13. (அ) கற்பின் பகுதிகள் எத்தனை வகைப்படும்? விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) கற்பிற்குரிய கிளவித் தொகைகளை விவரிக்க.

14. (அ) பாக்களுக்குரிய ஓசைகளையும் வகைகளையும் விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) பாக்களுக்கான அடிவரையறை குறித்துச் சுட்டுக.

15. (அ) முதற்தொடை யாவை? சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) கலிப்பாவின் உறுப்புகளைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் <u>மூன்றனுக்குக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.

16. மருதத்திணைக் கருப்பொருட்களைச் சான்றுகள் காட்டி விவரிக்க.

17. உடன்போக்கு எத்திணைக்குரியது? அதன் இடையீட்டு வகைகளை விளக்கிடுக.

18. அகத்திணையில் வாயில்கள் பெறுமிடத்தை நிறுவுக.

19. காரிகை பேசும் செய்யுள் உறுப்புகள் யாவை? கட்டுரைக்க.

20. வெண்பாவின் பொது இலக்கணம் தந்து விளக்குக.

———————

| D–1105 |
|---|

| Sub. Code |
|---|
| 10733 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Third Semester

தமிழிலக்கிய வரலாறு

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. பாரதப் போரில் உணவளித்த தமிழ் மன்னன் யார்?

2. தமிழிலிருந்து பிரிந்த இரண்டு மொழிகளைக் குறிப்பிடுக.

3. ஐந்திலக்கணம் கூறும் இலக்கண நூல்களை எழுதுக.

4. ஐங்குறுநூற்றுப் புலவர்களில் இருவரைக் குறிப்பிடுக.

5. மணநூல் என அழைக்கப்படும் காப்பியம் எது?

6. நாவுக்கரசரை ‘அப்பர்’ என விளித்தவர்?

7. காலத்தால் முற்பட்ட கலம்பகம் எது?

8. தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் யார்?

9. தமிழில் தோன்றிய முதல் இரண்டு நாவல்களைக் கூறுக.

10. ‘கருவாச்சிக் காவியம்’ படைத்தத் தற்காலக் கவிஞர்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ்நாடு வடஇந்தியாவோடு கொண்டிருந்த தொடர்பினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியத்தின் அமைப்பினை விளக்கி வரைக.

12. (அ) மூன்று சங்கங்கள் இருந்த இடங்கள் குறித்தக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாட்டும் தொகையும் – விளக்கம் தருக.

13. (அ) ஐப்பெரும்காப்பியம் குறித்த செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) காரைக்காலம்மையாரின் பக்திநெறியைப் புலப்படுத்துக.

14. (அ) கம்பராமாயணத்தின் தனித்துவத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருக்குற்றாலக் குறவஞ்சியின் தோற்ற வரலாற்றை உரைத்திடுக.

15. (அ) இசைத் தமிழ் வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) நவீன இலக்கியங்களின் வகைமையையும் வரலாற்றையும் விவரிக்க.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

-பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்மொழியின் தனித்துவத்தை நும்பாடப் பகுதியால் நிறுவுக.

17. சங்க இலக்கியங்களின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

18. பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களைக் கட்டுரைக்க.

19. தமிழ்ச் சிறுகதை வரலாற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

20. ஹைக்கூ வரலாற்றை அப்துல் ரகுமான் வழி நின்று எழுதுக.

| D–1106 |
|---|

| Sub. Code |
|---|
| 10734 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Third Semester

காப்பிய இலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சிலப்பதிகாரத்தின் பாவிகத்தைக் கூறுக.

2. ஐவகை மன்றங்கள் யாவை?

3. இளங்கோவடிகள் ஒரு சமணத்துறவி இக்கூற்று சரியா?

4. குன்றக் குரவை, காதை கூறும் செய்தி யாது?

5. சீவக சிந்தாமணி எத்தனை இலம்பகங்களைக் கொண்டது?

6. சீவக சிந்தாமணி வழிச் சமண சமயத்தின் அறக்கருத்துகள் இரண்டினைக் கூறு?

7. கம்பராமாயணம் ஆறு காண்டங்களின் பெயர்களைக் கூறு?

8. கம்பரின் கவிப்புலமையை அறிந்த மன்னன் அவருக்குச் சூட்டிய பட்டப்பெயர் என்ன?

9. திருத்தொண்டர் புராண வரலாற்றில் சேக்கிழாரின் வரலாற்றைப் புகழ்ந்துரைப்பது யார்?

10. யாருடைய வேண்டுதலை ஏற்றுச் சீறாப்புராணத்தை உமறுப்புலவர் இயற்றினார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாடல மறையோன் கூறிய அறிவுரைகளைக் கூறுக?

(அல்லது)

(ஆ) கொலைக்களக் காதை – தொகுத்துக் கூறுக?

12. (அ) சிந்தாமணி கூறும் நல்லுரைகளைக் கூறுக?

(அல்லது)

(ஆ) கேமசரியார் இலம்பகத்தின் சிறப்புகளைப் புலப்படுத்துக?

13. (அ) கம்பராமாயணத்தின் அமைப்பையும் சிறப்பையும் விவரித்தெழுதுக?

(அல்லது)

(ஆ) இராமனைக் குகன் காணவந்த நிகழ்ச்சியை விவரிக்க.

14. (அ) பூசலார் நாயனாரின் சிவபக்தியை விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) உமறுப்புலவரின் வரலாற்றைத் தொகுத்தெழுதுக.

15. (அ) தேம்பாவணியின் நூல் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) மானுக்குப் பினை நின்ற படலத்தைச் சீறாப்புராணம் வழி நின்று விளக்குக?

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிலப்பதிகாரம் தோன்றிய வரலாற்றைத் தொகுத்தெழுதுக.

17. சிலப்பதிகார வஞ்சிக்காண்ட நிகழ்வுகளைக் கட்டுரைக்க.

18. ஐம்பெருங்காப்பியங்களுள் சீவகசிந்தாமணி பெறுமிடத்தை விவரிக்க.

19. பாலை நிலத்தின் இயல்புகளைத் தேம்பாவணி உரைக்குமாற்றை விளக்குக.

20. கைகேயி இராமன் சந்திப்பைக் கம்பர் எடுத்துக்கூறுமாற்றை எழுதுக.

| D–1107 |
|---|

| Sub. Code |
|---|
| 10741 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fourth Semester

கவிதை இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தருமத்தின் வாழ்வுதன்னைச் சூது கவ்வும் - யார்? யாரிடம் கூறியது?

2. அமுதவல்லிக்கு உதாரனன் கற்றுரைத்த தீங்கவிதைகளைக் குறிப்பிடுக.

3. மனோன்மணியத்தின் மூல நூல் எது? எழுதியவர் யார்?

4. துன்பம் சிதறிப்போகும் என்பதற்குச் சுரதா காட்டும் உவமை யாது?

5. கய்யாம் என்னும் சொல்லின் பொருள் யாது?

6. தைப்பாவை என்னும் பெயர் எவற்றை நினைவூட்டுகின்றன?

7. சிற்பியின் சாகித்ய அகாதமி பரிசு பெற்ற நூல் எது?

8. சிந்தர் என்பது எக்கவிதையைக் குறிக்கிறது?

9. நறுக்குகள் என்பதனைக் காசி அனந்தன் எவ்வாறு குறிக்கின்றனர்?

10. சி. கல்யாணசுந்தரத்தின் புனைப் பெயர்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பீமனின் கோப மொழிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் காணமுற்படும் புதிய உலகு பற்றி விளக்குக.

12. (அ) சிக்கன் குறித்த சுரதாவின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உள்ளத்து உண்மை குறித்துத் தேசிய விநாயகம் பிள்ளை கூறுவன யாவை?

13. (அ) கண்ணதாசன் மும்மன்னர்கள் குறித்து எழுதுவன யாவை?

(அல்லது)

(ஆ) சிற்பியின் உருவத்திறனை நும் பாடப்பகுதி வழிப் புலப்படுத்துக.

14. (அ) என் செவியின் சுவாசம் உணர்த்தும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பிச்சமூர்த்தியின் புதுக்கவிதை முயற்சிகளை விளக்கியுரைக்க.

15. (அ) வாழ்க்கை குறித்த கல்யாண்ஜியின் எண்ணங்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) சென்ரியூ கவிதைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாஞ்சாலி சபதம் வெளிப்படுத்தும் விடுதலை உணர்வுகள் - என்ற தலைப்பில் கட்டுரை தருக.

17. கவிமணியின் சொல் நயங்களைச் சான்றுகளுடன் விவரித்தெழுதுக.

18. சிற்பியின் கவிதை நயங்களை ஆராய்க.

19. பால்வீதியில் இடம் பெற்றுள்ள கவிதைப் பொருண்மைகளை விளக்கியுரைக்க.

20. தமிழன்பனின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள் குறித்து விவரிக்க.

| D–1108 |
|---|

| Sub. Code |
|---|
| 10742 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fourth Semester

இலக்கணம் –புறப்பொருளும் அணியிலக்கணமும்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                    Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. புறப்பொருள் வெண்பாமாலை எப்பாவில் பாடப்பட்டுள்ளது?

2. வெட்சியரவம் – விளக்கம் தருக.

3. கையறுநிலை என்றால் என்ன?

4. தலைமாராயம் – பொருள் தருக.

5. நூலிலாட்டு என்பதை விளக்குக.

6. களவழி வாழ்த்து குறிப்பு வரைக.

7. உரைதரு நூலின் தனித்துவத்தைக் கூறுக.

8. பொருளணியியல் எத்தனை அணிகள் பேசப்பட்டுள்ளன?

9. இருவகை சிலேடைகளைக் கூறுக.

10. ஒட்டணி என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) புறப்பொருள் வெண்பாமாலை பேசும் விரிச்சு என்பதனை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நொச்சியும் மருதமும் – இயைபு காட்டி விளக்குக.

12. (அ) பாசறையின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தார்நிலை எத்திணைக்குரியது? விளக்குக.

13. (அ) வையகம் வணங்க வாளோர் சினனெனச்

செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று" என்னும் கொளு பேசும் துறையைச் சுட்டுக.

(அல்லது)

(ஆ) வேளாண் வாகையின் தனித்துவத்தைப் புலப்படுத்துக.

14. (அ) தன்மையணியினை வகைகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) சிலேடை அணி, விசேட அணி ஆகியவற்றை விளக்குக.

15. (அ) எடுத்துக்காட்டு உவமை அணியின் இலக்கணத்தைச் சான்று காட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) பாவிகம் என்றால் என்ன? அணியியலில் பெரும் முக்கியத்துவத்தை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நொச்சித்திணை உணர்த்தும் செய்திகளைக் கட்டுரைக்க.

17. வாகைத்திணையின் துறைகளை விளக்கி வரைக.

18. தும்பைப் போரின் இயல்புகளைச் சான்றுகள் காட்டி விளக்குக.

19. இலக்கியப் படைப்பில் உவமை அணி பெறும் முக்கியத்துவத்தை உணர்த்துக.

20. சொற்பின்வருநிலை அணி – இலக்கணம் தந்து விளக்குக.

———————

| D–1109 |
|---|

| Sub. Code |
|---|
| 10743 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fourth Semester

நாட்டுப்புறவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நாட்டுப்புறவியல் – சொல் விளக்கம் தருக.

2. தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை எனப் போற்றப்படுபவர்?

3. 'ஒப்பாரி' இலக்கிய வழக்கியல் எங்ஙனம் அழைக்கப்படுகிறது?

4. விடுகதையைத் தொல்காப்பியர் எங்ஙனம் குறிப்பிடுகிறார்?

5. 'பரமார்த்த குரு கதை' என்ற கதைத் தொகுதியின் ஆசிரியர்?

6. 'பிறை கவ்வி மலை நடக்கும்' – என்னும் விடுகதையை விடுவிக்க.

7. தமிழ் மருத்துவமுறையை எங்ஙனம் குறிப்பிடுவர்?

8. எத்தெய்வ வழிப்பாட்டில் 'கரகம்' முதன்மையிடத்தைப் பெறுகிறது?

9. செவ்வாய் நோன்பு – சிறு குறிப்பு வரைக.

10. 'லந்து' என்ற வட்டார வழக்குச் சொல்லின் பொருள் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழக நாட்டுப்புறவியல் வரலாற்றைச் சுருக்கி வரைக.

(அல்லது)

(ஆ) குழந்தை வளர்ப்பில் தாலாட்டுப் பாடல் பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

12. (அ) வாலப்பகடை முத்துப்பட்டனுக்கு வைத்த சோதனைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முளைப்பாரி இடும் முறைகளை வழிபாட்டுச் சான்றுகளுடன் விளக்குக.

13. (அ) சொலவடைகள் (பழமொழிகள்) பேச்சு வழக்கில் பெறுமிடத்தை உணர்த்துக.

(அல்லது)

(ஆ) 'மாரி' குறித்த நம்பிக்கைகளை எடுத்துக்காட்டுகளுடன் சுருக்கி வரைக.

14. (அ) ஒயிலாட்டத்தின் அடவு முறைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழக நாட்டுப்புறக் கைவினைப் பொருட்களின் தனித்துவத்தை நிறுவுக.

15. (அ) உணவே மருந்து மருந்தே உணவு என்னும் தமிழர் கோட்பாட்டை விவரிக்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற விளையாட்டுகளின் இயல்புகளை எடுத்துரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. எழுத்திலக்கியத்திலிருந்து நாட்டுப்புற இலக்கியத்தின் வேறுபடுத்திக் காட்டுக.

17. தெருக்கூத்து ஒன்றின் நிகழ்த்து முறைகளை விளக்கி வரைக.

18. ராஜாதேசிங்கு நட்பிற்கு அளித்த முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

19. ஜல்லிக்கட்டு விளையாட்டின் வரலாற்றைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

20. ‘கனவு’ குறித்த நம்பிக்கைகளை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

———————

| D–1110 |
|---|

| Sub. Code |
|---|
| 10744 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fourth Semester

இதழியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. இதழ்களின் பிறப்புப் பற்றி விளக்குக.

2. “செய்தி” குறிப்பு வரைக.

3. ஆப்பிரிக்க கண்டத்தில் எப்போது செய்தித்தாள் தொடங்கியது?

4. இந்திய தேசியக் காங்கிரசின் முதற்கூட்டம் எப்போது எந்தாண்டு தொடங்கியது?

5. சமூக இதழ்கள் – விளக்குக.

6. தொடக்க காலத்தில் வெளிவந்த இலக்கிய இதழ்கள் இரண்டினைக் கூறுக.

7. பத்திரிக்கையின் ஆசிரியரைப் பற்றி எழுதுக.

8. யுனைடெட்பிரஸ் இன்டர் நேஷனல் குறிப்பு வரைக.

9. தலையங்கம் விளக்கம் தருக.

10. மகளிர் இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) இதழ்கள் ஜன நாயகத்தின் தூண்கள் விவரிக்க.

(அல்லது)

(ஆ) இந்திய இதழியல் வரலாற்றினை விளக்கி வரைக.

12. (அ) தமிழகத்தில் இதழ்களின் வளர்ச்சி வரலாற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) சிறப்புக் கட்டுரை என்றால் என்ன? நேரடிச் செய்தியிலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?

13. (அ) புகைப்படக் கருவி ஒரு போர் வீரனின் ஆயுதம் என்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) இலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கினை விவரிக்க.

14. (அ) இதழியல் துறையில் வானொலியின் பங்கு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) செய்தித் தொடர்பு வாயில்களை விளக்குக.

15. (அ) செய்தி மதிப்பு என்றால் என்ன விவரிக்க?

(அல்லது)

(ஆ) இதழ்களின் எதிர்காலம் சிறப்புற்றுத் திகழ்தற்குரிய வழி நிலைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சிற்றிதழ்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விளக்குக.

17. பருவ இதழ்கள் என்றால் என்ன? அவற்றின் பல்வேறு வகைகளை விவரிக்க.

18. பத்திரிக்கை அலுவலக அமைப்பை விவரித்து அதன் பணியாளர்களின் கடமைகளைக் கூறுக.

19. சமுதாயத்தை மாற்றியமைப்பதில் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கை விளக்குக.

20. இதழியலாளர்களுக்கான பண்புகளைக் கட்டுரைக்க.

———————

| D–1111 |
|---|

| Sub. Code |
|---|
| 10751 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fifth Semester

பண்டைய இலக்கியம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours　　　　Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக..

1. பண்டைய இலக்கியங்கள் எவை?
2. மனையுறை புறவுகளின் செயலை எழுதுக.
3. புண்ணுமிழ் குருதி - பெயர்க்காரணம் கூறுக.
4. செலவு அழுங்குவித்தல் என்றால் என்ன?
5. தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதற்குரிய காரணங்களைக் கூறுக.
6. பரிபாடலில் இடம்பெற்றுள்ள செய்திகளை எழுதுக.
7. பகைவயிற் பிரிவு - குறிப்பு வரைக.
8. இற்செறித்தல் என்பதை விளக்குக.
9. ஒழிபியலில் எத்தனை அதிகாரங்கள் காணப்படுகின்றன?
10. கீழ்மக்கள் ஒழுக்கமாக இருப்பதற்குக் காரணம் என்ன?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாசறைக் காட்சியை ஆவூர் மூலங்கிழார் வருணிப்பதை விளக்குக.

(அல்லது)

(ஆ) தலைவன் செலவு அழுங்கிய செயலைக் கந்தரத்தனார் எங்ஙனம் விவரிக்கிறார்?

12. (அ) நெடுநல்வாடையில் மகளிர் வழிபடுமாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) இமயவரம்பனின், மறப்பண்பினையும், கருணை பண்பினையும் விவரிக்க.

13. (அ) பல்சான்றீரே என்ற பாடலின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பரிபாடலில் தலைவியர் மோதிக்கொள்ளும் காட்சியை விவரிக்க.

14. (அ) திருக்குறளின் சிறப்புகளை விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) வள்ளுவரின் பண்புடைமை செய்திகளைத் தொகுத்துரைக்க.

15. (அ) குடிசெயல்வகை குறித்த வள்ளுவரின் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) கயமை தலைப்பில் இடம்பெற்றுள்ள செய்திகளை விவரி.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. சங்க கால வாழ்வியல் கூறுகள் இன்றைய வாழ்வியலின் நீட்சியாக உள்ளனவா? ஆராய்க.

17. குளிரின் கொடுமையை நக்கீரர் நெடுநல்வாடையில் எங்ஙனம் கட்டுரைக்கிறார்?

18. செலவுப்பத்தில் கூறப்பட்டுள்ள பிரிவின் துயரினைப் புலப்படுத்துக.

19. 'பெருமை' யின் சிறப்புகளை வள்ளுவர் வழி நின்று தெளிவுபடுத்துக.

20. திருக்குறள் உலக பொது நூல் என்ற கூற்றை ஆராய்க.

| D–1112 |
|---|

| Sub. Code |
|---|
| 10752 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fifth Semester

இலக்கணம் -தொல்காப்பியம் : எழுத்து, இளம்பூரணம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours                Maximum : 75marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. முப்பாற் புள்ளி என்று எதனைக் குறிப்பர்?
2. சுட்டு, வினா எழுத்துக்கள் யாவை?
3. உச்சகாரம், உப்பகாரம் குறிப்புத் தருக.
4. ல, ள எவ்வாறு பிறக்கும்?
5. உடம்படுமெய் என்றால் என்ன?
6. ஓகார இறுதி பெறும் சாரியை எது?
7. 'மக' விற்குரிய சாரியைகள் எவை?
8. மழையென் கிளவி எவற்றோடு நிலையும்?
9. உகரம் எவ்விடத்துக் குறுகும்?
10. 'மூன்ற னொன்றெ நகாரமாகும்' சான்று காட்டுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) போலி எழுத்துக்கள் குறித்துத் தொல்காப்பியர் சுட்டுவன யாவை?

12. (அ) உருபுப்புணர்ச்சி பற்றிய புணரியல் கோட்பாட்டைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) ஐகார வேற்றுமைத் திரிபுகளைத் தக்கச் சான்றுடன் விளக்குக.

13. (அ) ஆகாரவீற்றுச் சொற்புணர்ச்சி விதிகளை எடுத்துக்காட்டுக.

(அல்லது)

(ஆ) ஔகாரவீறுகள் இருவழியிலும் புணருமாற்றத்தைத் விளக்குக.

14. (அ) மகர ஈற்றுச் சொற்கள் புணர்ச்சி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) லகார ஈற்றுச் சொற்கள் புணருமாற்றத்தைத் தெளிவுபடுத்துக.

15. (அ) தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதிகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியரின் குற்றியலுகரக் கோட்பாட்டைப் புலப்படுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளி.

16. எழுத்துக்களின் பிறப்பினைக் குறித்துக் கட்டுரை வரைக.

17. சாரியைகளையும் அவற்றின் திரிபுகளைப் பற்றி விவரித்தெழுதுக.

18. ணகர, னகர ஈற்றுச்சொற்களின் புணர்ச்சி விதிகளை விளக்குக.

19. மரப்பெயர்ப் புணர்ச்சிகளைச் சான்றுகளுடன் தொகுத்தெழுதுக.

20. குற்றியலுகரத்தின் வகைகளைச் சான்றுடன் நிறுவுக.

**D–1113**

**Sub. Code**
**10753**

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fifth Semester

ஊடகவியல்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘ஊடகவியல்’ விளக்கம் தருக.

2. சித்த மருத்துவ இதழ்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. திராவிட நாடு - சிறுகுறிப்பு வரைக.

4. செய்தி உள்ளடக்கத்தின் வாய்பாட்டைக் கூறுக.

5. தலையங்கம் - குறிப்பு வரைக.

6. பதிப்புரிமை என்றால் என்ன?

7. இந்தியாவில் கார்டூனை அறிமுகப்படுத்தியவர் யார்?

8. ‘கோடை பண்பலை’ எவ்வாண்டு துவங்கப்பட்டது?

9. OTT என்பதன் விரிவாக்கம் தருக.

10. இந்திய குடியரசுத்தலைவர் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஒரு ஓட்டின் மதிப்பு?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இதழ்களின் வகைகளைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) ஊடகவியலின் மூன்று செயல்முறைகளைச் சுட்டியுரைக்க.

12. (அ) செய்தியின் உள்ளடக்கம் அமையுமாற்றை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) செய்தி நிறுவனங்களின் பணிகளையும் கடமைகளையும் விவரிக்க.

13. (அ) செய்தியாளர்களுக்குரிய தகுதிகளையும் பண்புகளையும் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இதழியலில் ஆசிரியர்களின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

14. (அ) விளம்பரங்களின் வகைகளைச் சான்றுகளுடன் வரைக.

(அல்லது)

(ஆ) பத்திரிக்கை மன்றம் ஆற்றும் பணிகளை எடுத்துரைக்க.

15. (அ) திரைப்படங்களால் விளையும் நன்மைகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஊடகச் செயல்பாட்டில் கணினி பெறுமிடத்தைச் சுட்டியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுள் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக

16. தற்கால ஊடகவியலின் செயல்பாடுகள் பெற்ற வளர்ச்சியை விவரிக்க.

17. செய்தித்தாள் பின்னடைவைச் சந்திப்பதற்கான காரணங்களை எழுதுக.

18. ஊடக வளர்ச்சிக்கு விளம்பரங்கள் உதவுமாற்றை ஆராய்க.

19. தகவல் தொடர்பில் மின்னஞ்சல் பெறும் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துக.

20. இணையவழித் தமிழ்க்கல்வி வளர்ச்சியைச் சான்றுகளுடன் விவரிக்க.

———————

| D–1114 |
|---|

| Sub. Code |
|---|
| 10754 |

DISTANCE EDUCATION

B.Lit.(Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Fifth Semester

இலக்கணம்: தொல்காப்பியம்: சொல் – சேனாவரையம்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. வழக்கு எத்தனை வகைப்படும்?

2. பலபொருள் ஒரு சொல்லின் வகைகள் யாவை?

3. முதல், சினைப் பொருள்களில் மயங்கும் வேற்றுமைகள் யாவை?

4. விளியேற்கும் உயிரீறுகள், மெய்யீறுகள் யாவை?

5. விளியேற்கும் அசைச்சொற்களைக் சுட்டுக.

6. தன்மைப் பன்மை வினைமுற்றுக்களைச் சுட்டுக.

7. ஓகார இடைச்சொல் எவ்வப் பொருள்களைத் தருக.

8. பயப்பு, பசப்பு - தரும் பொருள்களை எழுதுக.

9. தொகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

10. கடிசொல் இல்லைக் காலத்துப் படினே - விளக்குக.

பகுதி ஆ — ($5\times 5=25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளி.

11. (அ) வினா, விடைகளின் வகைகள் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியம் கூறும் இடவழுவமைதியை விவரிக்க.

12. (அ) ஆறாம் வேற்றுமையின் பாகுபாட்டைச் சுட்டியுரைக்க.

(அல்லது)

(ஆ) சினை முதற்பெயர்கள் குறித்து விளக்குக.

13. (அ) உயர்திணைப் பெயர்கள் குறித்த தொல்காப்பியரின் கருத்துக்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'உம்' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களை விவரிக்க.

14. (அ) முன்னிலை வினைமுற்று, வியங்கோள் வினைமுற்றுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அறுவகைச் செய்யுள் விகாரங்களைச் சான்றுடன் நிறுவுக.

15. (அ) எச்சவியல் உணர்த்தும் நான்கு பொருள்கோள்களைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) பண்பின் அடிப்படையில் பிறக்கும் உரிச்சொற்கள் யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளி.

16. தொல்காப்பியர் பேசும் மரபு வழுவமைதிகளைத் தொகுத்தெழுதுக.

17. தொல்காப்பியர் கூறும் ஆகுபெயரின் பாகுபாடுகளைக் கட்டுரைக்க.

18. இடைச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் கட்டுரைக்க.

19. பத்துவகை எச்சங்களைச் சான்றுகளுடன் நிறுவுக.

20. எச்சவியல் கூறும் தொகைச் சொற்களின் வகைகளைத் தொகுத்துரைக்க.

| D–1115 |
|---|

| Sub. Code |
|---|
| 10761 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

ஒப்பிலக்கியம்

(CBCS 2018 – 19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. Comparative Literature என்னும் தொடரை முதன் முதலில் கையாண்டவர் யார்?

2. கதிர்மகாதேவனின் ஒப்பியலக்கிய ஆய்வு நூல்கள் இரண்டனைக் குறிப்பிடுக.

3. பண்டையத் தமிழ்ப் புறப்பாடல்களும் வீரநிலைக் காலப்பாடல்களே – என நிறுவியவர்?

4. புகழ் பெறல் கோட்பாடு எவ்வாறு குறிக்கப்படுகின்றது?

5. நால்வகை இலக்கியப் பார்வைகளைக் குறிப்பிடுக.

6. கனவுகளின் அடிப்படை விளக்கம் என்ற நூலின் ஆசிரியர்?

7. திருக்குறளோடு கருத்தில் ஒற்றுமை உடைய நூலாகக் கருதப்படும் வடமொழி நூல் எது?

8. வீறுணர்ச்சி கவிதை இயக்கம் விளக்கம் தருக.

9. பொதுமை இலக்கியம் குறிப்புத் தருக?

10. எது உலக இலக்கியம் என்பதற்கு ஆல்பர்ட் கயார்டு அளிக்கும் விளக்கம் யாது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பிரெஞ்சியரின் ஒப்பிலக்கியச் சிந்தனைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழில் ஒப்பிலக்கிய அறிமுகம் குறித்து விளக்குக.

12. (அ) அடிக்கருத்துக் கோட்பாட்டுக் குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) ஒப்பிலக்கித்திற்கும் மொழி பெயர்ப்புக்கும் உள்ள தொடர்புகளை விவரி.

13. (அ) நிரை கவருதல் குறித்த ஒப்பிலக்கியச் சிந்தனைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கவிதை இயக்கங்கள் குறித்து எழுதுக.

14. (அ) அறநெறிக்கோட்பாடுகள் குறித்த ஒப்பிலக்கியப் பார்வைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அக வெளியீட்டுக்கொள்கை குறித்து விவரிக்க.

15. (அ) இலக்கிய ஒருமைப்பாடு குறித்து விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) உலகப் பொதுமை இலக்கியத்தின் தன்மைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் குறித்துக் கட்டுரை தருக.

17. ஒப்பிலக்கியத்தில் ஏற்றல் கொள்கைகளின் பணிகளைச் சான்றுகளுடன் நிறுவுக.

18. உலக இலக்கிய மரபில் வீரயுகப்பாடல்களின் தன்மைகள் குறித்து விவரித்தெழுதுக.

19. புதுச்செந்நெறி இலக்கியங்களில் தோற்றம் வளர்ச்சி நிலைகளை ஆராய்க.

20. ஒப்பிலக்கியப் பண்பும் பயனும் குறித்து விளக்கியுரைக்க.

**D–1116**

| Sub. Code |
|---|
| **10762** |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

இலக்கணம் : தொல்காப்பியம் – பொருள் – இளம்பூரணம்

(CBCS 2018 – 19 Academic year onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. நடுவண் ஐந்திணை எனத் தொல்காப்பியர் கூறு திணைகள் எவை?

2. உயர்ந்தோர் மேன – எவை யெவை?

3. மராயம் பெற்ற நெடு மொழி என்பதன் பொருள் யாது?

4. மதியுடம்படுத்தலின் மூவகைகளைக் குறிப்பிடுக.

5. கரணம் என்பது யாக்கப்பட்டது ஏன்? யாத்தவர் யார்?

6. மனைவி உயர்வும் கிழவோன் பணிவும் எச்சூழலில் நிகழும்?

7. அழுகை நான்கு எவையெவை?

8. சுட்டிக் கூறா உவமத்தின் தன்மை யாது?

9. பிசியின் இருவகை நிலைகளைக் கூறுக.

10. அம்மை - பொருள் விளக்கம் தருக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தொல்காப்பியர் சுட்டும் கருப்பொருள்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கைக்கிளைக் குறிப்பாகத் தொல்காப்பியம் காட்டுவன யாவை? விவரிக்க.

12. (அ) தாபதநிலை, தபுதார நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) குறி, குறியிடம் குறித்த களவியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) கற்பில் இளையோர் கூற்று நிகழிடங்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) உள்ளுறையின் வகைகளை விளக்கி எழுதுக.

14. (அ) தலைமகட்கு ஆகாத மெய்ப்பாடுகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியர் சுட்டும் அடிவகைகளை சுருக்கி வரைக.

15. (அ) யாப்பு என்பது யாது? அதன் வகைகளை விவரி?

(அல்லது)

(ஆ) நூலின் வகைகளை விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. முதல்கரு உரிப்பொருள் குறித்த அகத்திணைக் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. காஞ்சித் திணைக் குறித்த தொல்காப்பியர் கருத்துக்களை ஆராய்க.

18. கற்பியலில் தலைவன் கூற்றிடங்கள் குறித்து விவரித்தெழுதுக.

19. உவமயங்களின் வகைகளை விளக்கியுரைக்க.

20. அடிவரையறை இல்லாதன குறித்த தொல்காப்பியச் சிந்தனைகளை ஆராய்க.

---

| D–1117 |
|---|

| Sub. Code |
|---|
| 10763 |

DISTANCE EDUCATION

B.Lit. (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

நாடகத்தமிழ்

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours    Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1. கலைகளின் அரசி எது?

2. தமிழ்மொழி எத்தனைப் பிரிவுகளைக் கூறுக.

3. நாடக வழக்கினும் என்று நாடகத்தைக் குறிப்பிடும் நூல் எது?

4. நாடகப்பாங்காக அமைந்துள்ள எட்டுத்தொகை அகநூலினைக் கூறுக.

5. 'கூத்தாட் டவைக்குல்லாத் தற்றே' என்பது எதனைக் குறிக்கிறது?

6. நாடகக் காப்பியமாகவே திகழக்கூடிய காப்பியத்தைக் குறிப்பிடுக.

7. மத்தவிலாச பிரகசனம் குறித்துக் கூறுக.

8. இராஜராஜனின் வெற்றிச் சிறப்பைப் பாராட்டும் சோழர் கால நாடகம் எது?

9. முதன் முதலில் மேடையில் நடிக்கப்பட்ட சமூக நாடகம் எது?

10. தமிழ் நாடக முன்னோடிகள் இருவரைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நாடகம் குறித்து அடியார்க்கு நல்லார் வழி நின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) சோழர்கால நாடகங்களின் சிறப்பினை எடுத்துரைக்க.

12. (அ) நாயக்கர் கால நாடகங்கள் குறித்துத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) மராத்தியர் கால நாடகங்கள் தரும் செய்திகளை வகைப்படுத்தியுரைக்க.

13. (அ) விலாச நாடகங்கள் என்றால் என்ன? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) குறு நாடகங்கள் குறித்து விளக்குக.

14. (அ) இதிகாச, வரலாற்று நாடகங்கள் தரும் செய்திகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பெண்ணிய நாடகங்கள் குறித்து விளக்கியுரைக்க.

15. (அ) சங்கரதாஸ் சுவாமிகள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

(ஆ) நாடக வளர்ச்சியினைப் பம்மல் சம்மந்த முதலியார் வழிநின்று தெளிவுபடுத்துக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாடகக் கலையின் உலகப்பொதுமை தன்மையை விளக்கி வரைக.

17. ஓரங்க நாடகம் இன்றைய சூழலுக்குப் பொருந்துமாற்றை எடுத்துரைக்க.

18. நாடக அரங்க அமைப்பு முறையைக் கட்டுரைக்க.

19. இந்திய விடுதலையில் தமிழ் நாடகங்களின் பங்கினைக் கட்டுரை வடிவில் எழுதுக.

20. நாடகங்களின் தோற்றம் வளர்ச்சி குறித்து விரிவாக ஆராய்ந்துரைக்க.

---

| D–1118 |
|---|

| Sub. Code |
|---|
| 10764 |

DISTANCE EDUCATION

B.Lit (Tamil) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

விளம்பரக் கலை

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. சந்தையின் குரல் விளம்பரம் – என்பது யார் கருத்து?

2. விளம்பர உலகின் தந்தை யார்?

3. விளம்பரங்களின் வகைகள் யாவை?

4. விளம்பர உத்தி – விளக்கம் தருக.

5. விளம்பர ஒலி வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

6. ABC என்பதன் விரிவாக்கம் என்ன?

7. சர்வதேச விளம்பர விருது எங்கு யாரால் வழங்கப்பட்டது?

8. விளம்பரம் தயாரிக்கும் துறையில் இடம் பெறுவோர் யாவர்?

9. கவன ஈர்ப்பு உத்திகளுக்குச் சான்று தருக.

10. இந்திய ஒப்பந்தச் சட்டம் 1872 எதனை வரையறுக்கிறது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குக் ஒரு பக்க அளவில் விடை தருக.

11\. (அ) நினைவூட்டல் விளம்பர நோக்கங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மறைமுக விளம்பரங்கள் குறித்து விளக்குக.

12\. (அ) தொழில்துறை விளம்பரங்களின் தன்மைகளை விவரி.

(அல்லது)

(ஆ) விளம்பரத்தின் தீமைகள் யாவை? விவரிக்க.

13\. (அ) விளம்பரத்தில் நகைச்சுவைகள் ஏற்படுத்தும் நன்மை தீமைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சார்லஸ் எல் விட்டர் எழுப்பும் பண்டத்தின் பயன் குறித்த வினாக்களை எடுத்துரைக்க.

14\. (அ) விளம்பர நிறுவனத்தின் தகுதிகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) நுகர்வோர் வழிகாட்டி குறித்து விளக்கியுரைக்க.

15\. (அ) விளம்பரத்தின் ஒழுக்க நெறிகள் எவ்வாறு அமைதல் வேண்டும்?

(அல்லது)

(ஆ) விளம்பரங்களில் பண்பாட்டுக் கலப்புக் குறித்து விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. விளம்பரங்களின் நோக்கங்கள் – என்ற தலைப்பில் கட்டுரை வரைக.

17. விளம்பரத்தின் நன்மை தீமைகள் குறித்து விவரித்தெழுதுக.

18. விளம்பரத்தின் கூறுகளை விரித்துரைக்க.

19. விளம்பர நகலின் அமைப்பினைப் புரிந்துகொள்ள உதவும் பல்வேறு பிரிவுகளை விளக்கியுரைக்க.

20. விளம்பர உத்திகளை வகைப்படுத்தி விளக்குக.